தேசியமயமாக்கலும் மலையகத் தமிழர்களும் - குருதிமலை நாவலை அடிப்படையாகக் கொண்டதோர் மதிப்பீடு

நா. சுதர்ஷினி

விரிவுரையாளர், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

ஆய்வுச்சுருக்கம்

ஐரோப்பியரின் வருகையினால் தமிழுக்குக் கிடைத்த இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல், தனிமனித வாழ்வியலை படம்பிடித்துக் காட்டுவதைக் காட்டிலும் ஒரு சமூகம் தொடர்பான கருத்தியலை உலகுக்கு படம் பிடித்துக் காட்டும் ஒருவகை புனைகதை இலக்கியமாகும். அது, கற்பனையாகவும், யதார்த்தத்தின் பிரதிபலிப்பாகவும் உரைநடையில் எழுதப்படும் நெடுங்கதை இலக்கிய வடிவம் எனலாம். சுருக்கமாகக் கூறுவதாயின் நாவல் என்பது கதை கூறும் முயற்சியல்ல. அது குறிப்பிட்ட பிரச்சினையின் தர்க்கரீதியான வளர்ச்சியினை வரலாற்று முறையில் எடுத்துரைப்பதாகும். அது வெறுமனே நிகழ்ச்சி விவரணமாக அமையாது மனித உணர்வுகளதும், உறவுகளதும் இயங்குநிலையை வாசகனைக் கவரும் வகையில் தரும் போது ‘புதினமாய்’ பரிணமிக்கின்றது. இவ்வாறான காரணங்களால் நாவல்கள் சமுதாயத்தின் சரித்திரங்கள் எனப்படுகின்றன. மேற்கூறிய விடயங்களை அடியொற்றி ஈழத்தில் பல நாவல்கள் வெளிவந்துள்ளன. இவ்வகையில், மலையக மக்களின் வாழ்க்கைக் கோலங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையில் படைக்கப்பட்ட நாவல்கள் பலவுள்ளன. இவற்றுள் தி. ஞானசேகரனால் படைக்கப்பெற்ற ‘குருதிமலை’ நாவலும் ஒன்றாகும். 1970 களில் இலங்கையில் காணப்பட்ட பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. இந்நிகழ்வு மலையக மக்கள் மத்தியில் பாரிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்ததோடு, சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து வாழ்வதற்கான சூழ்நிலையையும் தோற்றுவித்தது. இக்காலப் பின்னணியை அடியொற்றி உருவாக்கப்பட்ட நாவலாக ‘குருதிமலை’ காணப்படுகிறது. இந்நாவல் மலையக மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் வரலாற்று ஆவணமாய் போற்றத்தக்கது என்று பலராலும் விதந்து கூறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வடிப்படையில், இந்நாவலினூடாக வெளிப்படுத்தப்படும் சிங்கள - மலையகத் தமிழ் மக்களிடையே காணப்பட்ட உறவுநிலை, தேயிலைத் தோட்டங்கள்

© 2022, IRJTSR

தேசியமயமாக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் என்பவற்றை அறியும் நோக்குடனேயே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

திறவுச் சொற்கள்: மலையகம், தேசியமயமாக்கம், பெருந்தோட்டங்கள், குருதிமலை

I. முன்னுரை

1979 இல் வீரகேசரிக் பிரசுரமாக வெளிவந்த இந்நாவல் அவ்வாண்டுக்கான சாகித்திய விருதையும் பெற்றது. இந்நாவல் பற்றிக் கலாநிதி நா.சுப்பிரமணியம் கூறும்போது 'கதை சொல்லும் முறையிலும், தொழிலாளரது பண்பாட்டுக் கோலங்களை காட்டும் முறையிலும், ஞானசேகரன் அவர்களது ஆற்றல் விதந்து பாராட்டத்தக்கது. நாவலின் ஒவ்வொரு அம்சத்தையும் மிகவும் பொறுப்புணர்வோடு திட்டமிட்டுச் செப்பமுற அமைத்துள்ளமை தெரிகிறது. இதனால் இதுவொரு இலக்கியம் என்ற வகையில் மட்டுமின்றி மலையக மக்களின் ஒரு காலகட்ட வரலாற்று ஆவணம் எனத்தக்க தகுதியும் பெற்றுள்ளது. பேரினவாதத்திற்குப் பணியாத தமிழுணர்வின் முதற்கட்ட வெற்றிக்கு கட்டியம் கூறி நிற்கும் படைப்பு இது எனலாம். (சுப்பிரமணியம், 1988, ப, 49) என்கிறார். மலையகத்தைக் களமாகவும், மலையகத்தவர்களின் வாழ்க்கையை பாடுபொருளாகவும் கொண்டு மலைக்கொழுந்து, தூரத்துப் பச்சை, சொந்தக்காரன், வீடற்றவன் போன்ற பல படைப்புகள் முகிழ்த்திருந்த போதும், பேரினவாதத்திற்கும் மலையகத்தமிழ் மக்களுக்கும் இடைப்பட்ட உறவுநிலை, தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதன் விளைவுகள் பற்றிய யதார்த்தமான வெளிப்பாட்டுத் தன்மையினை மையமாகக் கொண்டு நோக்கும் போது இப்படைப்பு தனித்துவமானதாகப் போற்றப்படவேண்டியதாகின்றது.

மேலும், 'எழுபதுகளின் பிற்பகுதியில் இம்மக்களின் வாழ்வில் இடியெனப் புகுந்த இனவாத நிகழ்வுகளை, அரசாங்க ஒடுக்குமுறைகளை துணிச்சலாக வெளிப்படுத்திய நாவலாக இது அமைகிறது. டெல்டா, சங்குவாரி தோட்டங்களில் காடையர்களின் அணிவகுப்பு மலையக மக்களின் வரலாற்றில் ஓர் இரத்தக் கீறலை ஏற்படுத்தியது என்றால், தோட்டக் காணிகள் வேறு மக்களின் குடியிருப்பிற்கு கொடுப்பதற்கான அரசாங்கத்தின் தேர்தல் தந்திரத்திற்கு எதிராக இணைந்த மக்கள் மீது பாய்ந்த வேட்டில் சிவனு லட்சுமணன் பலியானது மரண குத்து விழுந்ததற்கு சமானம். இந்த சம்பவங்களை பிரக்ஞைபூர்வமாக உள்வாங்கி வரலாற்றாசிரியர்களின் பங்களிப்புக்கு மேலாக படைப்புத் திறனாலும், பாத்திர வார்ப்புகள் ஊடாகவும் உண்மைகளை இந்நாவல் ஆசிரியர் முன்வைக்கிறார்.' ((முரளிதரன்.சு, 2001, ப- 33)

ஆகவே, குருதிமலை நாவலானது மலையக மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல விளைவுகளைப் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பெற்ற படைப்பிலக்கியம் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வடிப்படையில், தேயிலைத் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதன் விளைகளையும், சிங்கள – மலையகத் தமிழ்

மக்களுக்கிடையிலான உறவுநிலைப் பற்றியும் வெளிப்படுத்துமாற்றை வருமாறு நோக்கலாம்.

II. நாவலில் உலவும் சிங்களக் கதாபாத்திரங்கள்

நாவலில் உலவும் பாத்திரங்களின் அடிப்படையில் நோக்கும் போது ஏழ்மை, இயற்கையின் வஞ்சனை போன்ற இன்னோரன்ன காரணிகளால் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்த இம்மக்களால் இலங்கைக்கு அதிக பயனைப் பெற்றுத் தந்திருக்கிறது என்று தோட்டத் தொழிலாளர்களோடு இணைந்த செயற்படும் சிங்களவர்களையும், அவர்களுக்கு எதிராகச் செயற்படும் சக்திகளாக ஒரு சாராரையும் காணமுடிகிறது. இவ்வகையில், சுமனபால, பியசேன, முதியான்சே போன்றோர் தோட்டத் தொழிலாளர்களோடு இணைந்து செயற்படும் பாத்திரங்களாகவும், தோட்டத் தொழிலாளர்களை எதிர்க்கும் சக்திகளாக பண்டா முதலாளி, பொடிசிங்க, கிராசேவகர் போன்ற கதாப்பாத்திரங்களும் காணப்படுகின்றன. இவ்வகைப்பாட்டினூடாக, சிங்களவர்கள் மத்தியில் மலையக மக்களைப் பற்றி வெவ்வேறு விதமான சிந்தனைப் போக்குகள் காணப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

III.தேயிலைத் தோட்டங்களும் தேசியமயமாக்கலும்

பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவதால் தமக்கு விடிவு காலம் ஏற்படப்போகின்றது என்று தோட்டத்தொழிலாளர்கள் நம்பினர். அதேசமயத்தில் தோட்டப்புறத்தை அண்டிய கிராமப்புற மக்களோடு தோழமை பேணத் தயாராகினார்கள். ‘மலையக மக்களின் வாழ்க்கை ஆரம்பகாலந்தொட்டே சிக்கலும் துன்பங்களும் நிறைந்ததாக இருந்து வந்திருக்கிறது. அந்நியர்களின் ஆதிக்கத்தில் தேயிலைத் தோட்டங்கள் இருந்த போது அவர்களின் கெடுபிடிகளில் சிக்கித் தவித்த தோட்டத் தொழிலாளர்கள் தமது விடிவை நோக்கி ஏக்கத்துடன் காத்திருந்த வேளையிலேதான் தேயிலை தோட்டங்கள் யாவும் தேசியமயமாக்கப்பட்டன. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியின் பயனாக தமக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையப் போகிறதென தோட்டத் தொழிலாளர்கள் நம்பினர். …….’ என்று தி.ஞானசேகரன் குருதிமலை நாவலின் அணிந்துரையிலே வெளிப்பட்டுத்தியுள்ளமை தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை மக்கள் மத்தியில் எத்தகைய எதிர்பார்ப்பை தோற்றவித்தது என்பதை பறைசாற்றுகிறது. 1975ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட காணிச் சீர்திருத்த சட்டமானது அந்நியர் மற்றும் இந்நாட்டவர் வசமிருந்த அனைத்து தோட்டங்களையும் தேசியமயமாக்குவதற்கு உறுதுணையாக இருந்தது. அதுவரைக்காலமும் நிலவி வந்த தனியார் நிர்வாகத்தின்மீது மிகுந்த வெறுப்பினை அடைந்திருந்த மலையக மக்கள், இத்திட்டத்தினை வரவேற்றனர். இதன் மூலமாகவேணும் தங்களுக்கொரு முகவரி கிடைக்கும் என்ற நம்பிக்கை அம் மக்களிடத்தே இருந்தது.

> "தோட்டங்களையெல்லாம் இண்ணையிலையிருந்து அரசாங்கம் எடுத்திருச்சி. இனிமே, நம்மளுக்கெல்லாம் விடுதலை கெடச்ச மாதிரித்தாங்க" (குருதிமலை, 1979, பக். 5-6)
>
> "தோட்டத்தை அரசாங்கம் எடுத்ததை நீங்க என்னமோ நெனச்சுப்புட்டீங்க போலையிருக்கு: இனிமோதான் நம்மளுக்கு எவ்வளவோ ஒதவி கெடைக்கப்போவுது. இவ்வளவு நா**ளா** கொம்பனிக் காரங்களுக்கும் தோட்டச் சொந்தக்காரங்களுக்கும் நாம அடிமையா இருந்தோம். அவங்க நெனச்ச மாதிரி நம்மளை ஆட்டிப் படைச்சுக்கிட்டு இருந்தாங்க.... இனிமே இந்த நாட்டிலை இருக்கிற மத்தவங்க மாதிரி நாமளும் தலை நிமிர்ந்து நடக்கலாம்.' (குருதிமலை, 1979, பக். 16-17)

மேற்கூறப்பட்ட கூற்றுகள் கம்பனிக்காரர்களுக்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடந்த அவர்களுக்கான விடுதலையாய் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படும் விடயம் தென்பட்டது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும்,

> 'மாதச் சம்பளத்தைப் பத்தி இனிமேதான் பேசப் போறாங்க. மத்தவங்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கிற மாதிரி நம்மளுக்கும் கொடுக்கத்தான் செய்வாங்க: அதோட நம்ம தோட்டத்துப் பிள்ளைகளுக்கும் படிக்கிறதுக்கு வேண்டிய வசதியும் செஞ்சு கொடுப்பாங்க. ஸ்கூலையும் அரசாங்கத்துக்கு எடுத்து தோட்டப்பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் குடுக்க புதுசா மாஸ்டர்மாரையும் அனுப்பி வைப்பாங்க.' (குருதிமலை, ப.19)

என்று அவர்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர். வியர்வை சிந்தி கடினமாக உழைத்து இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் செயற்பட்டவர்கள் வறுமையில் வாடி, தொடர்வீடுகளில், கம்பனிகளினதும், தோட்ட நிர்வாகத்தினதும் சுரண்டலுக்குள்ளாகி உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாத நிலையில் இருந்த போது தோட்டங்கள் தேசியமயமாகப்படுவதாய் அறிந்த அவர்களுக்கு அது விடிவு காலத்தினை ஏற்படுத்தப்போகும் விடயமாய் தெரிந்தது. அத்தோடு தமது பிள்ளைகளுக்கு முறையான கல்வி கிடைக்கப்போவதாகவும் எண்ணி தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவது தமக்கு மட்டுமின்றி தமது எதிர்கால சந்ததியினருக்கும் விடுதலையை பெற்றுத்தரப் போகிறது என எண்ணியவாற்றை தெளிவுபடுத்துகிறது. இருப்பினும் மாயாண்டி போன்ற சிலர் தமது அனுபவத்தின் அடிப்படையில் தேசியமயமாக்கல் என்பது தமக்கு எவ்விதத்திலும் நன்மை பயக்கப்போவதில்லை என்பதை எதிர்வு கூறுகின்றனர்.

> 'என்னத்தான் இருந்தாலும் தம்பி தோட்டங்களைக் கொம்பனிக்காலத்திலை நடத்தினமாதிரி அரசாங்கத்திலை நடத்துவாங்கன்னு எனக்கு நம்பிக்கை இல்லை' (குருதிமலை, ப. 16)

என்று மாயாண்டி கூறுவது தக்க எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. ஆனாலும் மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்ட நம்பிக்கையை சிறிதும் தளரவிடாது தமக்கு நல்ல காலம் கிடைக்கப்போவதாக எண்ணி மகிழ்ந்தனர். மாதாந்த சம்பளம், விடுமுறை, மரியாதை,

பிள்ளைகளுக்கான கல்வி, கல்விக்கேற்ற தொழில் இதுபோன்ற அடிப்படைத் தேவைகளே அவர்களின் உயர்ந்த எதிர்பார்ப்புகளாக இருந்தன.

சில அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகளாக செயற்பட்டதால் இரு சமூகத்தினருக்கும் இடையே மனக்கிளர்ச்சிகள் ஏற்படத்தொடங்கின. அதேபோல மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த சிங்களவர்கள் சிலா் இந்தச் சூழ்நிலையை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ளவும், தொழிலாளர்கள் மத்தியில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தவும் தேசியமயமாக்கலை ஆயுதமாக்கிக் கொண்டமையையும் நாவலின் வழி அறியமுடிகிறது. மாாிமுத்துத் தலைவா் கையிலிருந்த மாலையை, பண்டா அவருக்குத் தெரியாமல் எடுத்து மந்திரிக்குப் போட்டுவிட்டு தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் செயற்பாடு இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். மேலும்,

> ‘அண்ணிக்கு மந்திரி வந்தப்போ, இந்த நாட்டாளுக எல்லாம் தோட்டத்துக்குள்ள நொழைஞ்சி அவுங்களும் கூட்டத்தில பங்குபத்தினாங்க, கொம்பனிக் காலமென்னா அப்படிச் செய்யமுடியுமா?’ (குருதிமலை, ப.27)

என்று மாயாண்டி தான் அவதானித்த விடயத்தைக் கங்காணியிடம் கூறுவதைக் கொண்டும் சிங்களவர்கள் நடந்துகொண்ட விதத்தினை அறியமுடிகிறது. அதுமட்டுமின்றி, ஒரு சில தோட்டங்களில் இருந்து மக்களை வெளியேற்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை எதிர்த்த தொழிலாளிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் மலையக மக்களுடைய தொழிலுக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. மழை, வெயில் என்ற எந்த நிலையிலும் அவர்கள் வேலை என்று நிர்பந்திக்கப்பட்டு இருந்தார்கள். அவர்களின் உடல்நிலை, உளநிலை பற்றிய சிந்தனை மேலதிகாரிகளிடம் இருக்கவில்லை. அவர்கள் தமது இலாபம் பற்றி மட்டுமே சிந்தித்தனர். மழை காரணமாக மலையகத் தோட்டத்தெழிலாளர்களும், வீரய்யாவும் மடுவத்திற்குச் சென்றபோது கண்டக்டர் நடந்துகொண்ட விதம் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

> ‘என்னா அங்க சத்தம் போடுறது? எல்லாங் வாயை மூடிக்கிட்டு நில்லு. இன்னிக்கு அரைப் பேருதான் எல்லாத்துக்கும் போடுறது.’ (குருதிமலை, ப.45)

மேலும், இரவுநேரப் பகுதிகளில் தொழிற்சாலை மணியை ஒலிக்கச் ஆண்கள் வெளியேறியபின் பெண்களையும் அம்மக்களின் வீடுகளை தீக்கிரையாக்கி சின்னாபின்னப் படுத்தியதாக கூறப்பட்டிருப்பதன் ஊடாக மக்கள் எவ்வாறான பின்னணியை கொண்டு வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. சிங்கள இனவெறியர்கள் மடுவங்களில் புகுந்து சூறையாடத் தொடங்கி லயங்களில் இருந்த பொருட்களை எல்லாம் சூறையாடினார்கள். லயங்களில் உள்ள பெண்ணை பலவந்தமாக பிடித்த குண்டன் அவளது கற்பை சூறையாடினான். அதுமட்டுமல்லாமல் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டு லயங்களுக்குத் தீ வைத்தனர். பெட்ரோல் குண்டுகளை வீசினர். மாட்டுத் தொழுவத்தில் வேயப்பட்ட கூரை தீப்பற்றி அங்கிருந்த பசுமாடுகள் மிக பயங்கரமாக கதறிக் கொண்டிருந்தன. இறுதியில் தீயில் அனைத்தும்

எரிந்து கொண்டிருப்பதை மட்டுமே அவர்களால் பார்க்க முடிந்தது வேறு ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆண்டாண்டு காலம் அவர்கள் தேடி வைத்திருந்த நகைகளை பறிகொடுத்து எஞ்சியவை நெருப்பில் அழிந்து போவதை பார்த்து அழுது புலம்பிய விதம் நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதால் அம்மக்களுக்கு ஏற்பட்ட நிலையை வெளிப்படுத்துகின்றது.

அத்தோடு, சிங்களவர்கள் வருமானம் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு மதுவைப் பயன்படுத்தி மற்றவர்களைத் தம்வசப்படுத்தி அதனூடாகத் தமது வியாபார நோக்கங்களையும், பொருளாதாரத் தேவைகளையும் நிறைவு செய்துகொள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக பண்டா முதலாளி காணப்படுகிறார். அவர் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டியவற்றைத் தான் பெற்றுக்கொள்ளவேண்டுமென நினைத்து பல கைங்கரியங்களைச் செய்து அவற்றைப் பெற்றுக்கொள்கிறார். உதாரணமாக கிராமசேவகரிடம் கதைத்து வயற்காணிகளைப் பெற்றுக்கொண்டமை, கூட்டுறவுக் கடைகளில் உள்ள அரிசி, பால்மா போன்றவற்றைப் பெற்றுக்கொண்டமை, தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கக்கூடாது என நிர்வாகம் கட்டளையிட்ட போது திருட்டுத் தனமாக கொழுந்து பறித்து விற்றமை, தொழிற்சாலையில் தோட்டத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் உரத்திற் கொஞ்சம் தந்தால் உதவியாக இருக்கும். அதனைத் தோட்டத்திலிருந்து மிக இலகுவாக கொண்டு சென்று பிற பகுதிகளில் விற்கலாம் எனக் கூறி கண்டக்டர் ஐயாவிடம் உரம் கேட்பது போன்ற செயல்கள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகக் காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி, தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு மற்றவர்களிடம் சகஜமாகப்பழகுவதையும், மதுபானம் கொடுத்து தமது எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக்காட்டாக,

> ‘அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பண்டா முதலாளி தான் இருந்த கதிரையை நகர்த்தி மனேஜரின் அருகில் போட்டுவிட்டு இரகசியமான குரலில் ரேசன் அரிசி எதுவும் மீதிப்பட்டால் கூறுங்கள், நான் அதற்குரிய பணத்தைத் தந்துவிட்டு பெற்றுக்கொள்கிறேன். எனக் கூறிக்கொண்டே மனேஜரின் வெற்றுக் கிளாசில் சாராயத்தை ஊற்றினான்.’ (குருதி மலை பக் - 116)

என்றவகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பண்டா முதலாளியின் செயற்பாடு இதனை நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

அதுமட்டுமின்றி, தேசிய மயப்படுத்தப்பட்ட தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட காணிப்பங்கீடுகள் மலையக மக்களிற்கு பெரும் இடரைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே காணப்பட்டது. அதாவது வயல்களில் வியர்வை சிந்தி உழைத்தவர்களின் நிலங்கள் சூரையாடப்பட்டு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மலையக மக்கள் கடன்பட்டு வயலில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். அவர்களுடைய எதிர்பார்ப்புகள் எல்லாம் சுக்குநூறாக உடைந்தன. அங்கு சேவையாற்ற வந்த கிராமசேவகர்,

> ‘அது நமக்குந் தெரியும். இப்ப தோட்டத்தை அரசாங்கம் எடுத்ததினால இந்த வயல் எல்லாங் நமக்குத்தான் பொறுப்பா கொடுத்திருக்கு. இன்மே நாங் சொல்லாம இந்த வயலில் யாருங் வேலை செய்ய முடியாது.’ (குருதிமலை: ப. 118 – 119)

என்று சற்று பலமான குரலில் கூறுவதும்,

> ‘இப்ப நாங் ஒங்களுக்கு ஒரு விசயங் சொல்லத்தாங் வந்தது. தோட்டத்த இந்த மாசத்தோட மூடச் சொல்லி அரசாங்கத்திலிருந்து இன்னிக்கி எனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு. வாற மாசத்தில இருந்து ஒங்களுக்கு இந்த தோட்டத்தில வேலையில்ல. வேலை நிப்பாட்டிரது.’ (குருதிமலை: ப-184)

என்று கூறி அம்மக்களின் வேலையை இல்லாமல் செய்வதும், அரசாங்கம் தோட்டத்தை எடுப்பதற்கு முன்னரே பதவியில் இருப்பவர்களை ஓய்வு பெறும்படி உத்தரவிட்டதும், கண்டக்ரரை பார்த்து ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்கள் உத்தியோகம் பார்க்க முடியாது ஓய்வுபெறவேண்டும் என்று துரை கூறிவதும், கண்டக்டர் தன்னுடைய நிலையைக் கூறியபோதும். இது என்னுடைய உத்தரவு இல்லை அரசாங்கத்தினுடைய உத்தரவு என்று கூறுவதன் ஊடாக தோட்டங்கள் தேசிமயமாக்கப்படுவதற்கு முன்னரே அவர்களின் சுரண்டல் செயற்பாடு மக்களை அவலநிலைக்குத் தள்ளியது. இவ்வாறாக பல இடர்பாடுகளுக்கு அம்மக்கள் முகங்கொடுக்க நேரிட்டமையைக் காணலாம்.

> ‘என்னங்கையா அப்புடி சொல்லுறீங்க… இந்த வயலுக்கு நான் எவ்வளவோ செலவழிச்சு வேல செஞ்சுக்கிட்டு இருக்கன்: எப்புடிங்கையா எனக்குக் கொடுக்க மனம் வரும்.’ (குருதிமலை: ப. 118 – 119)

எனக் கறுப்பண்ணன் கூறிவேதனைப்படுவது தோட்டம் அரசாங்கத்திடம் கைமாறுவதை எண்ணி மகிழ்வடைந்த தொழிலாளர்கள் இறுதியில் தொழிலற்று, வசிப்பிடமின்றி நிர்க்கதியாக்கப்பட்ட நிலையை வெளிப்படுத்தி நிற்கிறது.

அரசியல் பழிவாங்கல்களும் இடம்பெற்றுள்ளமையை இந்நாவல் வெளிப்படுத்தி நிற்கிறது. அதாவது, தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசியல் தலைவர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்தவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். இதனை,

> ‘இப்போதுள்ள சில அரசியல் தலைவர்களுக்கு எதிராக நீங்கள் முன்னர் தேர்தலின் போது பிரச்சாரம் செய்தீர்கள் அல்லவா! மேடைகளில் கூட ஏறிப் பேசினீர்கள். அதனால்தான் இப்போது நீங்கள் பழிவாங்கப்படுகின்றீர்கள்.’ (குருதிமலை, ப – 57)

என்ற கூற்றின் வழி உணரக் கூடியதாகவுள்ளது.

அரசாங்கமும் மலையக மக்கள் தொடர்பில் சிந்திப்பதைக் காட்டிலும் பக்கச்சார்பாக நடந்து கொள்வதையும் கட்டமைக்கப்பட்ட வாழ்க்கை முறையின் வழி சிறுபுள்ளிகளாக இம்மக்கள் பட்ட அவஸ்தைகளை அறியக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறாக, இன ஏற்றத்தாழ்வுகளையும் மக்கள் எதிர்கொண்ட இன்னல்களையும் சித்திரிக்கும் போக்கினையும் குருதி மலை நாவலிலே காணலாம். எனினும், இன ஏற்றத்தாழ்வுகள் நாவலின் ஆரம்பத்திலே இத்தகைய விடயங்கள் அதிகமாக

வெளிப்படுத்தப்பட்ட போதிலும் பியசேனா, செந்தாமரை காதல் கொள்வது இளந்தலைமுறையினரிடம் மாறுபட்டச் சிந்தனைகள் உருவாக்கம் பெற்றதைக் காட்டுகிறது. இருப்பினும் பியசேனா, செந்தாமரை காதலால் தமது குடும்ப மானமே போய்விடும் என்று பண்டா முதலாளி சிந்திப்பதும் இவர்களது காதல் எல்லோருக்கும் தெரிந்தால் தன்னைத் தாழ்வாகவே கருதுவார்கள் என்றும் கிராமத்திலுள்ள அந்தஸ்து இல்லாமல் போய்விடும் என்று நினைத்து பியசேனாவை செந்தாமரை வேலை செய்யும் தோட்டத்திற்கு மாற்றம் செய்யவேண்டாம் என்று கண்டக்டரிடம் கூறுகிறார். அதனைப்போலவே முதியான்சேவும் தான் தோட்டத்துப் பெண்ணொருத்தியைக் காதலித்ததாகவும் அவளை வெளது பெற்றோர் தனக்குத் தெரியாமல் வேறு ஒருவருக்கு திருமணம் செய்து வைத்துவிட்டதாகவும் கூறுகிறார். இதன்மூலம் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் காதலிக்கவோ, திருமணம் செய்யவோ கூடாது என்ற நிலை காணப்படுவதைக் காணலாம். என்றாலும் பெரும்பான்மையினர் அனைவரும் ஒரே சிந்தனையை உடையவர்கள் அல்ல என்பதையும் இந்நிலை வெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறான பல துன்பங்களை அனுபவித்ததன் விளைவாய், இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுகிறது. இதற்கு வீரய்யா என்ற பாத்திரம் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

> ‘அதெல்லாம் முடியாது எப்படி எல்லாத்தையும் இந்தா பாருங்க இவங்க எல்லாம் உங்க கிட்ட போன மாசம் கவாத்து கட்டினவங்க இவங்க எல்லாத்துக்குமே பேறு இல்லை எல்லாத்துக்கும் பேரு வாங்கி கொடுக்க முடியுமா?’ (குருதிமலை, ப.136)

அதேபோல, குடியிருப்பு தீக்கிரையான பின்னும் அம்மக்கள் தோட்டத்தினைவிட்டு வெளியேறாது ஒற்றுமையுடன் செயற்பட்டதையும் தலைமைத்துவத்திற்கு கஷ்டடுப்பட்டு தங்கள் உரிமைகளை போராடி வென்றெடுப்பதில் இம்மக்கள் கொண்டிருந்த ஆர்வம் அவர்களும் தங்களது உரிமைகளை வென்றெடுக்கப் போராட வல்லவர்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மலையகத் தமிழர்கள் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் மத்தியில் சிங்களச் சூழலில் தம் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்காகத் தற்காப்புப் போராட்டத்தை நிகழ்த்தி வந்துள்ளமையை இந்நாவல் வெளிப்படுத்துகிறது. தோட்டங்களை தேசியமயமாக்கும் திட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் மலையக மக்கள் அதனை விரும்பி வரவேற்றனர். அதனால் தமது வறுமை நிலை மாறி கல்வி, பொருளாதார நிலை மாறும் என நம்பினர். ஆனால், அத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் அவர்கள் அதுவரை அனுபவித்த நன்மைகளைக் கூட அனுபவிக்க முடியவில்லை. இதன் காரணமாக தற்காப்புப் போராட்ட எழுச்சி தொழிலாளர்கள் மத்தியில் எழுகிறது. உரிமைகள் பறிபோகுமிடத்து போராட்டங்கள் எழுவது வழமை. அவ்வாறானதொரு செயற்பாடு இந்நாவலில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

> ‘முடியாது, முடியாது இனிமேலும் நாங்க பொறுத்திருக்கக் கூடாது. பல குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன. நாம எதையுமே எதிர்த்துக்

> கேக்கமாட்டோமுனு நெனச்சிக்கிட்டுத்தான் அவுங்க, நெனச்ச பாட்டுக்கு செஞ்சிகிட்டு வாறானுக. நாம இனிமே சும்மா இருக்கக் கூடாது. நம்ம எதிர்ப்பைக் காட்டணும்.'

என்ற கூற்றின் மூலம் அவர்களது அடக்கமுறை சார்ந்த செயற்பாடுகளும், தொழிலாளர் தமது காணிகளை இழக்க மனமின்றி போராட்டங்களில் ஈடுபட்ட விதத்தினையும் காட்டுகிறது.

IV.முடிவுரை

மலையக மக்களுக்கு மாதச் சம்பளம் என்ற பெயரில் சம்பளம் வெட்டப்பட்டது. கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது, காணிகள், வயல்கள் கைப்பற்றப்பட்டன, கல்வி கற்ற இளைஞர்களுக்கும் தொழில்வாய்ப்பு கிடைக்கவில்லை, தரக்குறைவாக நடத்தப்பட்டார்கள். இவ்வாறு, குருதிமலை நாவலின் ஊடாக அரசியல் மோசடிகளாலும் பேரினவாத சிங்களவர்களின் சூறையாடல் போன்ற நாசகாரியங்களினாலும் மலையக மக்கள் சீரழிந்த வரலாற்றினை அறிய முடிகிறது.

எனினும், இத்தகு நாசகாரியங்களின் விளைவாய், இதுவரை காலமும் எதுவும் அறியாது அடிமைகளாக இருந்த மலையக இளைஞர்கள் சற்று சிந்திக்க தொடங்கினார்கள். அதிகாரிகளை நோக்கி நியாயம் கேட்கத் தொடங்கினார்கள். இதனை வீரய்யா என்ற கதாபாத்திரத்தின் மூலம் ஞானசேகரன் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், இன வேறுபாடு பார்க்காமல் தொழிலாளர்கள் உரிமைக்காக வேண்டி சில சிங்கள நண்பர்களும் தமிழ் நண்பர்களுடன் இணைந்து போராட்டங்களை நிகழ்த்தினார்கள். வீரய்யா, ராமு போன்றோருடன் இணைந்து பியசேன, சுமனபால, முதியான்சே போன்றோர் தொழிலாளர்கள் சார்பாக நின்று போராடுவதைக் காட்டியதன் மூலம் இனங்களுக்கடையே உறவு உருவாக வாய்ப்புள்ளமையையும் ஆசிரியர் காட்டியுள்ளார். வீரய்யாவின் தங்கை செந்தாமரைக்கும், பியசேனவுக்கும் காதல் மலர்வதை எடுத்துக் காட்டுவதன் ஊடாக இந்நாவல் இனவிரோத கருத்துக்கு எதிரானது அல்ல என்பதை ஞானசேகரன் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

தோட்டங்கள் தேசியமயமாக்கத்திற்கு ஒரு தலைமுறையினர் தலை சாய்த்த போதும் இளந்தலைமுறையினர் உறுதியான தலைமை ஒன்றினை உருவாக்கிக் கொண்டு தொழிலாளரை வழிநடத்தும் பாங்கினை இந்நாவல் வெளிப்படுத்துகிறது. மேலும், பொதுசனத்தின் அபிப்பிராயத்திற்கு ஆக்கிரமிப்பாளர்கள் பணிந்தனர் எனக் கதை நிறைவடைவதன் ஊடாக மலையக மக்களின் வாழ்க்கை முறைமை மாற்றம் கண்டமையை வெளிப்படுத்துகிறது.

சான்றாதாரங்கள்

[1] **சாரல்நாடன்**, (2000), **மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்**, **கொட்டகலை**, **சாரல் வெளியீட்டகம்**

[2] **சிவகுமாரன், கே. எஸ்.**, (1999) **ஈழத்து நாவல்களிற் சில திறனாய்வு குறிப்புகள்**, **கொழும்பு**, **மீரா பதிப்பகம்**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR

[3] **சுப்பிரமணியம்.நா.**, (1988) 1978 – **க்குப் பின் ஈழத்தின் தமிழ் நாவலிலக்கியம்**, **மல்லிகை இதழ்**, **இதழ்**-213

[4] **ஞானசேகரன், த.**, (1979) **குருதிமலை**, **கொழும்பு**, **வீரகேசரி வெளியீடு**

[5] **முரளிதரன், சு.**, (2001) **மலையக இலக்கியத் தளங்கள்**, **கொட்டகல**, **சாரல் வெளியீட்டகம்**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு